**அன்னை பூபதி தமிழ்க் கலைக்கூடம் - நோர்வே**

# அன்னைத் தமிழ்முற்றம் - 2022

இணையவழி நிகழ்வு – மூதுரை ஒப்பித்தல் - ஆண்டு 3

**காலம்: 08.01.22 அல்லது 09.01.22 - சனி 15.00 அல்லது ஞாயிறு 11.00**

எம்மால் வழங்கப்பட்ட மூதுரைகளில் குறைந்தது ஒன்றினை (1) ஒப்பித்தல் விரும்பத்தக்கது.

## மூதுரை

1. நெல்லுக்கு இறைத்த நீர் வாய்க்கால் வழி ஓடிப்
புல்லுக்கும் ஆங்கே பொசியுமாம் - தொல் உலகில்
நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு
எல்லார்க்கும் பெய்யும் மழை. (வெண்பா 10)

*உழவன் நெல்லுக்குப் பாய்ச்சும் நீர் அங்கிருக்கும் புல்லுக்கும் பயனைத் தரும். அவ்வாறே இந்தப் பழமையான உலகில் நல்லவர் ஒருவருக்காகப் பெய்யும் மழையின் பயன்கள் எல்லாருக்கும் நன்மை தரும்.*

2. அட்டாலும் பால் சுவையில் குன்றாது அளவளாய்
நட்டாலும் நண்பல்லார் - நண்பல்லர்
கெட்டாலும் மேன்மக்கள் மேன்மக்களே சங்கு
சுட்டாலும் வெண்மை தரும். (வெண்பா 4)

*பாலை எவ்வளவு காய்ச்சினாலும் அதன் சுவை குறையாது. சங்கைச் சுட்டாலும் அதன் வெண்மை குன்றாது. அதே போல நற்பண்பு கொண்டோர் எந்நிலையிலும் தமது இயல்பில் இருந்து மாறமாட்டார்கள். ஆனால் நற்பண்பு இல்லாதோர் எவ்வளவு நட்பாகப் பழகினாலும் நல்லவர்களாக இருக்கமாட்டார்கள்.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**

3. நல்லார் ஒருவர்க்குச் செய்த உபகாரம்
கல்மேல் எழுத்துப்போல் காணுமே – அல்லாத
ஈரமில்லா நெஞ்சத்தார்க்கு ஈந்த உபகாரம்
நீர்மேல் எழுத்துக்கு நேர். (வெண்பா 8)

*நன்றியுள்ள ஒருவருக்குச் செய்த உதவியானது, கல்லில் செதுக்கிய எழுத்துப் போல் நிலையாக இருக்கும். அன்பு இல்லாதவர்க்குச் செய்த உதவியானது, நீரில் எழுதிய எழுத்துப் போல் பயனில்லாமல் அப்பொழுதே மறைந்து போகும்.*

**08.01.22 சனி அல்லது 09.01.22 ஞாயிறு என்பதை விண்ணப்பபடிவதில் தெரிவு செய்யலாம். தேவையேற்படின் மாற்றம் செய்யப்படும்**